




# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## சுதந்திர மக்கள் கூட்டணி உதயம்



பல அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய சுதந்திர மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்படி, எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, உத்தர லங்கா கூட்டணி உள்ளிட்ட 10 அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து சுதந்திர மக்கள் கூட்டணி என்ற புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 35 பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

## கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக பொறியியலாளர் யூ.எல்.ஏ.நஸார் பொறுப்பேற்பு

நூருல் ஹுதா உமர்



கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக ஆளுனரினால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் உதுமாலெவ்வை அஹமட் நஸார் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் இலங்கை பொறியியலாளர் சேவை வகுப்பு- I (SLES - I) ஐச் சேர்ந்த நீர்ப்பாசனத்துறையில் 25 வருடங்களுக்கு மேலான சேவை அனுபவத்தை பெற்ற சிரேஷ்ட அதிகாரியாவார். நீர்ப்பாசனப் பொறியியலாளராக, பிரதம நீர்ப்பாசன பொறியியலாளராக மற்றும் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் பொறியியலாளர் யூ.எல்.எ.நஸார் உலக வங்கியின் உதவியுடன் (World Bank) செயற்படுத்தப்பட்ட வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளராகவும் கடமையாற்றறியவர்.

இவர் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் இயக்குதல், பராமரிப்பு, நீர்மாணம், புனரமைப்பு, வடிவமைப்பு மற்றும் செயற்படுத்துதல் போன்றவாறான விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்பதுடன் பாரிய நீர்ப்பாசனக் குளமான திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனக் குளத்தின் நீர்க்கொள்ளளவினை அதிகரிக்கும் வடிவமைப்புக்குப் பொறுப்பாக இருந்து அதனைச் செவ்வனே செயற்படுத்தியவர். நீர்க்கொள்ளளவு அதிகரிக்கப்பட்டமை காரணமாக பயிர் செய்யும் காணிகளின் அளவு அதிகரிக்கப்பட்டமை இங்கு விசேடமாக குறிப்பிடத்தக்கது .

மேலும் பல பாரிய அணைக்கட்டு, வான், துருசு, Anicut பிரதான மற்றும் கிளை வாய்க்கால் நிர்மாணங்களுக்குத் தேவையான வடிவமைப்புக்களை (designs) செய்து வெளிநாட்டு மற்றும் இலங்கை அரசின் நிதியுதவிகளினால் செயற்படுத்தப்பட்ட பல திட்டங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளராக கடமையாற்றியவர். தற்போது உலக வங்கியின் உதவியுடன் பொத்துவில் மற்றும் லகுகல பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள சிறு குளங்கள் புனரமைக்கப்படுகின்றமைக்கும் பொறுப்பாக உள்ளவர் என்பதுடன் அக்குளங்களின் நீர்க்கொள்ளளவு அதிகரிப்படுவது காரணமாக அதிகரித்த பயிர்ச்செய்கை, அதிகரித்த உற்பத்தி என்பன தற்போதைய தேவையான உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாய் அமைகின்றது.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் (தேசிய பாடசாலை) கல்விகற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் விஞ்ஞானமானிப்பட்டத்தை சிவில் துறையில் பெற்றவர் என்பதுடன் நிர்மாண முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டவராவார். மேலும் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவரான இவர் பட்டயப் பொறியியலாளரும் ஆவார். சிரமம் பாராத அயராத கடமையினால் விவசாயிகளின் அன்பினைப் பெற்ற பொறியியலாளர் யூ.எல்.எ.நஸார் அவர்களின் கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் நியமனம் விவசாயிகளின் அதிகரித்த விவசாய செய்கை, அதனோடான அதிகரித்த உற்பத்தி என்பவற்றுக்கு உறுதுணையாக அமையும் என்பது திண்ணம்.

## கதிர்காமம் ஜனாதிபதி மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் பஸ் வண்டி அன்பளிப்பு




சாதி, மதம், குலம் மற்றும் கட்சி வேறுபாடின்றி அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்த அடிப்படை உரிமையான வாக்குரிமை கூட தற்போதைய அமைச்சரவையால் தடுக்கப்பட்டுள்ளதாகவும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கட்டுப்பணம் ஏற்றுக் கொள்வதை இடைநிறுத்த அமைச்சரவை சட்டவிரோதமாக தீர்மானித்துள்ளதாகவும், தற்போதைய நிறைவேற்று அதிகாரமும் அமைச்சரவையும் ஒன்றிணைந்து மக்களின் அடிப்படை உரிமைகளை காலில் போட்டு மிதிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதனால், சமூகத்தில் எழுந்த சர்ச்சையினால், அந்த முடிவை மாற்றிக் கொள்ள நேரிட்டாலும், இந்தத் தவறுக்காக அமைச்சரவை நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும், நாடாக நாம் இவ்வாறான விபரீதமான செயற்பாடுகளை மேற்கொள்ளாது, புதிய தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 68 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (5,000,000) ரூபா பெறுமதியான பாடசாலை பேருந்து வண்டியொன்று கதிர்காமம் ஜனாதிபதி மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்களால் நேற்று (11) அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அதேபோன்று, மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும், கணினியை சொந்தமாக்குவதற்கான ஏற்பாடு வழங்கப்படுமென்றும், இந்நாட்டின் எதிர்காலம் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரமாக அமைய வேண்டும் எனவும், அதற்கான தகவல், கற்பித்தல் மற்றும் தரவுகளுக்கான அணுகல் கிடைக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வங்குரோத்தான நாட்டில் நிதியில்லை, பிறகு பார்ப்போம் என்ற கதைகள் இன்றி, எமது இயலுமை மற்றும் முயற்சியின் அடிப்படையில் இந்நாட்டின் கல்வி மற்றும் சுகாதார துறைகளுக்கு கூடிய பெறுமானத்தைச் சேர்க்க முடிந்ததாகவும், எதிர்க்கட்சியாக இருந்தும், அதிகாரம் இல்லாவிட்டாலும், அமைச்சுப் பதவிகள், ஜனாதிபதி பதவிகள், பிரதமர் பதவிகள் எதுவுமின்றி மக்களுக்காக பல்வேறு பணிகளைச் செய்ததாகவும், 74 வருட கால எதிர்க்கட்சியின் வகிபாகத்தை முழுமையாக மாற்றி மக்களுக்குப் பெரும் சேவை செய்து மத்தியஸ்தமான பாதையில் செல்ல முடிந்ததாகவும், எதிர்க்கட்சியில் இருந்தும் மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்பதை நடைமுறையில் காட்டியுள்ளதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு பல்வேறு அலைவரிசைகளுக்கு பேட்டி கொடுப்பது மட்டுமின்றி சம்பிரதாயக் கட்டமைப்பை தாண்டி மக்களுக்கு பெரும் சேவை செய்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டின் ஆட்சியாளர்கள், ஆட்சியாளர்களை வணங்கும் அடிமைக் கூட்டத்தையே இதுவரை உருவாக்க விரும்பினாலும், பிரபஞ்சம் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், படித்த தலைமுறை, ஸ்மார்ட் இளைஞர்கள் மற்றும் சிறந்த ஆளுமை கொண்ட குடிமக்கள் தலைமுறையை உருவாக்குவதே தற்போதைய எதிர்க்கட்சியின் நோக்கமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டையே தீக்கிரையாக்கும் தலைமுறையை உருவாக்கவேண்டிய அவசியமில்லை எனவும், தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு டொலர்கள் தேவை எனவும், அந்த டொலர்களைக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவது மக்களின் பொறுப்பு என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இல்லை, முடியாது என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு நாட்டின் பிரச்சினைகள் ஒருபோதும் தீர்க்கப்படாது எனவும் அவர் தெரிவித்தார். மக்கள் கோரும் தீர்வை வழங்கும் திறன் தான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பேருந்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் போது சில தரப்பினர் கடுமையாக விமர்சிப்பதாகவும், இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு அவர்களும் தங்கள் உதவிகளை நல்க வேண்டியதையே செய்ய வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வளவு இரக்கமின்றி விமர்சிப்பவர்கள் மக்களுக்கு எந்தப் பணியையும் செய்ததில்லை எனவும் அவர் தெரிவித்தார். எனவே, யார் விமர்சித்தாலும், யார் சேறுபூசினாலும் இந்த பிரபஞ்சம் திட்டத்தை நிறுத்த முடியாது எனவும், 250க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இதுவரை பேருந்துகளைக் கோரியுள்ளன எனவும், இந்த இலக்கு கடினமாக இருந்தாலும் எப்படியாவது எட்டுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.